செய்தி வெளியீடு எண். 351 நாள். 5.7.2009

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசின் செய்தித்துறையின் சார்பில் சென்னை–கிண்டி காந்திமண்டப வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபத்தையும், அவரது திருவுருவச் சிலையையும், " ஏர்செல் " நிறுவனத்தால் அழகுபடுத்தப்பட்டுள்ள காந்தி மண்டப வளாகப் பூங்காவையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள், 7.7.2009 (செவ்வாய்க் கிழமை) மாலை 6 மணியளவில் திறந்துவைத்து விழாப் பேருரையாற்றுகின்றார்கள். இவ்விழா, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு பரிதி இளம்வழுதி அவர்களின் தலைமையில் நடைபெறுகிறது. இவ்விழாவில், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறையின் செயலாளர் திரு க.முத்துசாமி, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றுகின்றார்கள். வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு மா.சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் திரு ச.இராசேந்திரன், சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு ஞா.செந்தமிழன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் திரு ரவிக்குமார், ஏர்செல் செயல்முறை இயக்குநர்(தெற்கு) திரு க.வே.பா.பாஸ்கரன், ஏர்செல் மண்டல வர்த்தகத் தலைவர் திரு ஐ.வி.ஜே.பிரதீப், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநரும், சுற்றுலாத்துறை இயக்குநருமான முனைவர் ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் திரு க.தனசேகரன், சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திரு ஐ.கென்னடி ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றார்கள். செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு சி.காமராஜ், இ.ஆ.ப., விழாவின் இறுதியில் நன்றியுரையாற்றுகின்றார்.

************

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9